தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 184 | 4 Pages | 31.1.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 184 | 4 பக்கங்கள் | 31.1.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா**

**பிற்பகல் தாமே வரும்**

**விளக்கம்:**
முற்பகலில் மற்றவருக்கு துன்பமானவற்றைச் செய்தால் அவ்வாறு செய்தவர்க்கே பிற்பகலில் துன்பங்கள் தாமாக வந்து சேரும்.

# கைத்தறி துறை சார்பில் சென்னையில் ஒருங்கிணைந்த வளாகம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஜன.31

சென்னை எழும்பூரில் ரூ.227 கோடி மதிப்பீட்டில் 'ஒருங்கிணைந்த வளாகம்' கட்டப்பட உள்ளது. இதற்கு தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;

"தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (29.1.2025) தலைமைச் செயலகத்தில், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை சார்பில் சென்னை எழும்பூரில் உள்ள கோஆப்டெக்ஸ் வளாகத்தில் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு (Unity Mall) அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு அரசின் 20242025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "சென்னையில் 4 லட்சம் சதுர அடி பரப்பளவில் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு கைத்தறி மற்றும் கைவினைப் பொருட்களைக் காட்சிப்படுத்துவதற்கான கண்காட்சி அரங்குகளை உள்ளடக்கிய ஓர் ஒருங்கிணைந்த வளாகம் ரூ.227 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.



அதன்படி, சென்னை எழும்பூரில் உள்ள கோஆப்டெக்ஸ் வளாகத்தில் 4.54 லட்சம் சதுரஅடி பரப்பளவில்8தளங்களுடன்முழுவதும் குளிர்சாதன வசதியுடன் 227 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த வளாகத்திற்கு தமிழ்நாடு முதல்அமைச்சர் அடிக்கல் நாட்டினார். இக்கட்டத்தின் அடித்தளம் 1 மற்றும் 2இல் 323 கார்கள் நிறுத்தும் வசதியும்.

கோஆப்டெக்ஸ் காட்சியறையும், தரைதளம் முதல் இரண்டாம் தளம் வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களைச் சார்ந்த 41 கடைகளும், மூன்றாம் தளம் முதல் ஐந்தாம் தளம் வரை 36 இதரமாநில கடைகளும் (One District One Product Shops), ஆறு மற்றும் ஏழாம் தளங்களில் புத்தாக்க மையம் மற்றும் வடிவமைப்பு அச்சுக்கூடமும், எட்டாம் தளத்தில் கோஆப்டெக்ஸ் அலுவலகமும் அமைக்கப்படவுள்ளது.

மேலும், இவ்வளாகத்தில் உணவுக்கூடம், நான்கு மின்தூக்கிகள் மற்றும் இரண்டு தானியங்கி படிக்கட்டுகள், கழிப்பறைகள், தீயணைப்பு வசதிகள் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.

இந்த ஒருங்கிணைந்த வளாகமானது, ஒரு மாவட்டம் ஒரு பொருள் முன்முயற்சியின் கீழ், பொருளாதார வலுவூட்டல் மற்றும் கலாச்சார கொண்டாட்டத்தின் முன்னுதாரணமாக அமையும். இது கைவினைஞர்கள் மற்றும் நுகர்வோருக்கு இடையிலான புரிதலை வலுப்படுத்துவதையும், மாநிலத்தின்ஒவ்வொருமூலையிலிருந்தும் உள்நாட்டு தயாரிப்புகளைக் காட்சிப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த வளாகம் உள்ளூர் கைவினைத்திறனை மேம்படுத்துவதற்கும் கலாச்சார பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கும் இந்தியாவின் பலதரப்பட்ட கலாச்சாரங்களின் சான்றாகவும் விளங்கும். இந்த வளாகமானது புவியியல் எல்லைகளைக் கடந்து, உள்ளூர் தயாரிப்புகளுக்கு விரிந்த சந்தையினை வழங்குவதோடு, உள்ளூர் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு முக்கிய இடமாக அமையும்.

இந்த நிகழ்ச்சியில், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை செயலாளர் வே.அமுதவல்லி, கோஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் தீபக் ஜேக்கப் ஆகியோர் கலந்துகொண்டனர்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சவுதி அரேபியாவில் நடந்த சாலை விபத்து; 9 இந்தியர்கள் பலி



ஜிஷான், ஜன.31

சவுதி அரேபியாவின் மேற்கு பகுதியில் உள்ள ஜிஷான் நகரில் சாலை விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த சாலை விபத்தில் மொத்தமாக 15 பேர் உயிரிழந்தனர். அதில் இந்தியாவைச் சேர்ந்த 9 பேர் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனை சவுதி அரேபியாவின் ஜெட்டாவில் உள்ள தூதரக அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்த சம்பவம் தொடர்பாக இந்திய தூதரகம் தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த சம்பவம் குறித்து இந்திய அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு எங்களின் அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் தேவையான உதவிகளை செய்து கொடுப்பார்கள். காயமடைந்தவர்கள் விரைந்து குணமடைய வேண்டுகிறோம். இந்த விபத்து குறித்து தகவலை தெரிந்து கொள்வதற்காக, உதவி எண்களை வெளியிட்டுள்ளோம்,' எனக் குறிப்பிட்டிருந்தனர். இந்த விபத்து குறித்து வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் கூறியதாவது: இந்த விபத்தில் இந்தியர்கள் உயிரிழந்ததை அறிந்து வேதனையை அடைந்தேன். உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருடன் தொடர்பில் இருக்கும் இந்திய தலைமை அதிகாரியிடம் பேசினேன். அவர் தேவையான முழு உதவிகளை செய்து கொடுப்பார் என்றார்.

## பாகிஸ்தான்: 'டிக் டாக்கில்' வீடியோ போட்ட மகளை சுட்டுக்கொன்ற தந்தை கைது




கராச்சி, ஜன.31

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தை சேர்ந்த 15 வயது சிறுமி, 'டிக் டாக்' சமூக ஊடகத்தில் வீடியோ வெளிடுவதை வழக்கமாக வைத்திருந்தார். இந்த சிறுமியின் குடும்பம் கடந்த 28 ஆண்டுகளாக அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

இந்தநிலையில் சிறுமி, 'டிக் டாக்' வீடியோ போடுவதை வாடிக்கையாக வைத்திருந்துள்ளார். இது அவருடைய தந்தைக்கு பிடிக்கவில்லை. 'டிக் டாக்கில் வீடியோ போடுவதை நிறுத்தும்படி பலமுறை எச்சரித்துள்ளார். ஆனால் சிறுமி கேட்கவில்லை.

இதனிடையே பாகிஸ்தானின் குவெட்டாவில் உள்ள சொந்த ஊருக்கு சிறுமியின் குடும்பம் கடந்த 15ல் தேதி வந்தனர். அப்போது, வீட்டின் முன் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியின் உடலில் துப்பாக்கி குண்டு பாய்ந்து அவர்உயிரிழந்தார். எங்கிருந்தோபாய்ந்துவந்த குண்டுபட்டு சிறுமி இறந்ததாக அவரது தந்தை தெரிவித்தார்.

இது குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரித்து வந்தனர். போலீஸ் நடத்திய விசாரணையில் தந்தையும் அவரது மைத்துனரும் சேர்ந்து சிறுமியை கொலை செய்தது தெரியவந்தது. இதனால் இருவரையும் போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.பாகிஸ்தானில், 'டிக் டாக் வீடியோ' வெளியிட்ட 15 வயது மகளை அவரது தந்தையே சுட்டுக்கொன்ற சம்பவம் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

## மீனவர்கள் மீதான துப்பாக்கி சூடு தற்செயலாக நடந்தது இலங்கை கடற்படை விளக்கம்

கொழும்பு, ஜன.31

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மற்றும் தமிழக மீனவர்கள் 13 பேர் கோடியக்கரைக்கு தென் கிழக்கே உள்ள கடல் பகுதியில் மீன்பிடித்துக்கொண்டு இருந்தனர். அப்போது அவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் துப்பாக்கி சூடு நடத்தி 13 மீனவர்களையும் கைது செய்தனர். இதில் 2 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. புதுடெல்லியில் உள்ள இலங்கை தூதரை நேரில் அழைத்து, வெளியுறவுத்துறை அமைச்சகம், மீனவர்கள் மீதான துப்பாக்கி சூடு ஏற்புடையது அல்ல. இது விஷயத்தில் உரிய வழிமுறைகளை பின்பற்ற வேண்டும் என்று கண்டிப்புடன் கூறியது. இதே கருத்தை இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், இலங்கை அரசுக்கு தெரிவித்தது. இதனிடையே முதற்கட்ட விசாரணைகளின்படி, இலங்கை கடற்படை வீரர் ஒருவர் தற்செயலாக துப்பாக்கி சூடு நடத்தியதால் 2 இந்திய மீனவர்களும் காயமடைந்ததாக இலங்கை கடற்படைத் தளபதி காஞ்சனா பனகோடா தெரிவித்தார்.

## சுனிதா வில்லியம்சை பத்திரமாக பூமிக்கு அழைத்துவர எலான் மஸ்க் உதவியை நாடிய டிரம்ப்

வாஷிங்டன், ஜன.31

விண்வெளிக்கு சென்று தங்கி ஆய்வு செய்ய நாசா விண்வெளி வீரர்களான சுனிதாவில்லியம்சும், புட்ச் வில்மோரும் கடந்த ஜூன் 5, 2024 அன்று போயிங்கின் ஸ்டார்லைனரில் 10 நாள் பயணமாக சென்றனர். ஆனால், இருவரும் எட்டு மாதங்களாக விண்வெளி நிலையத்திலிருந்து திரும்ப இயலாமல் தவித்து வருகின்றனர்.

10 நாட்களில் ஆய்வு முடித்துவிட்டு பூமிக்கு திரும்பும் திட்டத்துடன் அனுப்பிவைக்கப்பட்ட அவர்கள், சர்வதேச விண்வெளி நிலையத்தை அடைந்த பிறகு, 'ஸ்டார்லைனர்' விண்கலத்தில் பாதிப்பு இருப்பதும், அதில் அவர்கள் பூமிக்கு திரும்புவது சாத்தியமில்லை என்பதும் தெரியவந்தது. இதனால் அவர்கள் அங்கேயே தங்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டிரம்ப், விண்வெளியில் சிக்கியுள்ள சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரையும் பத்திரமாக பூமிக்கு அழைத்துவர டெஸ்லா மற்றும் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைமை நிர்வாக அதிகாரியான எலான் மஸ்க்கின் உதவியை நாடியுள்ளார். இதுதொடர்பாக டிரம்ப் சமூக வலைத்தளத்தில், "ஜோ பைடன் நிர்வாகத்தால் விண்வெளியில் கிட்டத்தட்ட கைவிடப்பட்ட 2 துணிச்சலான விண்வெளி வீரர்களை அழைத்து வர எலான் மஸ்க்கைகேட்டுள்ளேன். பலமாதங்களாகசர்வதேசவிண்வெளிநிலையத்தில் காத்திருக்கும் அவர்கள் இருவரையும் எலான் மஸ்க் விரைவில் அழைத்து வருவார்" என்று பதிவிட்டிருந்தார். இதனிடையே டிரம்ப் தன்னிடம் உதவி கேட்டதை உறுதி செய்துள்ள எலான் மஸ்க், சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் ஸ்பேஸ்எக்ஸ் விண்கலம் மூலம் விரைவில் பூமிக்கு அழைத்து வரப்படுவார்கள் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## தேவகோட்டை பள்ளியில் புத்தக வாசிப்பு திறமைக்கு பாராட்டு - மாணவிகளுக்கு பரிசு வழங்கல்




தேவகோட்டை, ஜன.31

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியில் புத்தகங்களை வாசித்து சிறப்பாக பின்னுட்டம் வழங்கிய மாணவிகளுக்கு மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர் செந்தில் குமரன் புத்தகங்களை பரிசாக வழங்கி பாராட்டினார்.நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் முன்னிலை வகித்தார்.

மாணவர்களுக்கு புத்தக வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் நூலகப் புத்தகங்களை பரிசாக வழங்கினர்.ஏற்பாடு: ஆசிரியைகள் முத்துலெட்சுமி, முத்துமீனாள் படவிளக்கம்: கல்வி அலுவலர் செந்தில் குமரன் மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கி பாராட்டு தெரிவித்தார்.

## தென்காசி மாவட்ட செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் பதவி ஏற்றார்

தென்காசி, ஜன.31

தமிழ்நாடு தலைமைச் செயலகத்திலும், தேனி மாவட்டம் பெரியகுளம் நகராட்சியிலும் சிறப்பாக பணியாற்றிய நகராட்சி ஆணையாளர் கே. புனிதன் , தற்போது தென்காசி மாவட்டம் செங்கோட்டை நகராட்சி ஆணையாளர் 29012025 பதவி ஏற்றார்

உங்களின் செயல்பாடுகள் நேர்மையும், தொண்டும் மிக்கதாக இருக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்தப் புதிய பொறுப்பில் மக்கள் நலத்திற்கும் நகர வளர்ச்சிக்கும் உங்களின் அர்ப்பணிப்பு மேலும் உயர்வடைய, இறைவன் உங்களை அருளால் நேசிக்க உயர்ந்த பணியில் சிறப்புடன் செயல்பட்டு, மக்களின் நல்வாழ்வை உறுதி செய்ய, உங்கள் சேவை தொடர பொறுப்பு ஏற்றுக் கொண்டார்




## போராட்டம் நியாயமானது என்பதாலே டங்ஸ்டன் சுரங்க ஏலம் ரத்து: அண்ணாமலை



மதுரை, ஜன.31

போராட்டம் நியாயமானது என்பதாலே டங்ஸ்டன் சுரங்க ஏலம் ரத்து என்று தமிழக பாஜக மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, மத்திய அமைச்சர் கிஷன் ரெட்டியுடன் இன்று அரிட்டாபட்டி சென்றார்.அங்கு செய்தியாளர் சந்திப்பில் அண்ணாமலை கூறியதாவது: "அரிட்டாபட்டி சுற்றுவட்டார பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும். மாநில அரசின் மிரட்டலுக்கு எல்லாம் பிரதமர் மோடி அரசு அஞ்சுவதில்லை.

மக்களின் போராட்டம் நியாயமானது என்பதாலே டங்ஸ்டன் சுரங்க ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மத்திய மந்திரி கிஷன் ரெட்டி வந்திருக்கும் இந்த நாள் சரித்திரத்தில் இடம்பிடித்திருக்கிறது.

ஒவ்வொருவருக்கும் பிரச்சினை என்றால் மத்திய அரசு ஓடோடிவரும்.

எப்போதும் தமிழகத்திற்கு தோழனாக பிரதமர் மோடி இருப்பார். மண்ணின் மைந்தர்களுக்காக பிரதமர் மோடி இந்தத் திட்டத்தை ரத்து செய்துள்ளார். சட்டப்பேரவையில் தீர்மானம் போட்டதால் டங்ஸ்டன் சுரங்க திட்டம் ரத்து செய்யவில்லை " என்றார்

## காதல் திருமணம் செய்த தம்பி: ஆணவக்கொலை செய்த அண்ணனுக்கு மரண தண்டனை விதிப்பு

கோவை, ஜன.31

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சீரங்கராயன் ஓடையை சேர்ந்தவர் கருப்புசாமி. இவரது மகன் கனகராஜ். சுமைதூக்கும் தொழிலாளி. இவர் அதே பகுதியில் உள்ள வெள்ளிப்பாளையம் ரோட்டில் உள்ள வேறு சமூகத்தைச் சேர்ந்த வர்ஷினி பிரியா என்ற பெண்ணை காதலித்தார்.

இருவரும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் கனகராஜின் பெற்றோர் மற்றும் சகோதரர்கள் இவர்களது காதலுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதையடுத்து 2 பேரும் வீட்டை விட்டு வெளியேறி காதல் திருமணம் செய்து, சீரங்கராயன் ஓடை பகுதியில் வாடகை வீட்டில் வசித்து வந்தனர்.

இதனால் ஆத்திரம் அடைந்த கனகராஜின் சகோதரர் வினோத், வீடு புகுந்து கனகராஜ் மற்றும் வர்ஷினிபிரியாவை வெட்டினார்.

இதில் கனகராஜ் சம்பவ இடத்திலேயே பலியானார். வர்ஷினி பிரியா ஆஸ்பத்திரியில் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இந்த ஆணவ படுகொலை சம்பவம் கடந்த 2019ம் ஆண்டு நடந்தது. இந்த சம்பவம் தொடர்பாக மேட்டுப்பாளையம் போலீசார் வழக்குப்பதிவு செய்து வினோத்குமார் மற்றும் அவரது நண்பர்களான சின்னராஜ், கந்தவேல், அய்யப்பன் ஆகியோர் கைது செய்யப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டனர்.



இந்த வழக்கு கோவை சிறப்பு கோர்ட்டில் நீதிபதி விவேகானந்தன் முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி விவேகானந்தன், தம்பி மற்றும் அவரது மனைவியை ஆணவ படுகொலை செய்த வினோத்குமார் குற்றவாளி என்று தீர்ப்பு அளித்தார்.

அத்துடன் வினோத்குமாருக்கான தண்டனை விவரம் வருகிற 29ந் தேதி (புதன்கிழமை) அறிவிக்கப்படும் எனவும் நீதிபதி தெரிவித்திருந்த நிலையில் இன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி திட்டமிட்டு ஆயுதங்களுடன் வீட்டிற்குள் நுழைந்து இளம்தம்பதியை வெட்டிக்கொன்றது நிரூபனம் ஆனதால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொலைக்கு சதித்திட்டம் தீட்டி கைது செய்யப்பட்ட சின்னராஜ், கந்தவேல், அய்யப்பன் ஆகிய 3 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

## சமூக ஆர்வலர் கொலை வழக்கு: 5 பேரை சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரிக்க முடிவு

புதுக்கோட்டை, ஜன.31

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே உள்ள வெங்களூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜகபர் அலி (வயது 58). அதிமுக பிரமுகரும் சமூக ஆர்வலருமான இவர் திருமயம் துளையானூர் பகுதியில் இயங்கும்கல்குவாரிகளில் நடைபெறும்முறைமுறை கேடுகளுக்கு எதிராக போராடி வந்தார்.

இதையடுத்து கடந்த 17ந் தேதி ஜகபர் அலி லாரி ஏற்றி கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக திருமயம் போலீசார் வழக்குப் பதிவு செய்து ராசு, ராமையா ஆகிய 2 கல்







குவாரி அதிபர்கள் உள்பட 5 பேரை கைது செய்தனர்.

பின்னர் இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி. க்கு மாற்றப்பட்டு விசாரணை தொடங்கியுள்ளது. இன்ஸ்பெக்டர் புவனேஸ்வரி தலைமையிலான சி.பி.சி.ஐ.டி. போலீசார் கொலை நடந்த இடம் மற்றும் குவாரி உள்ளிட்ட வழக்கு தொடர்பான பல்வேறு இடங்களில் நேற்று முன்தினம் பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

பின்னர் கைதான ஐந்து பேரையும் காவலில் எடுத்து விசாரிக்க முடிவு செய்துள்ளனர்.

அதன்படி புதுக்கோட்டை இரண்டாவது ஜூடீசியல் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மனு தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். இதில் ஒவ்வொருத்தரையும் 5 நாட்கள் காவலில் எடுத்து விசாரிக்க மனு தாக்கல் செய்ய உள்ளனர்.

நீதிமன்றம் அனுமதிக்கும் நாட்களில் அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சி.பி.சி.ஐ.டி. போலீசார் தெரிவித்தனர்.

## கோவை ஜெயிலில் கைதி மர்ம மரணம்: ஜெயில் வார்டன்கள் உள்பட 4 பேர் சஸ்பெண்டு

கோவை, ஜன.31

திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு சுந்தராபுரத்தை சேர்ந்தவர் யேசுதாஸ்(வயது33).

இவர் கடந்த 2012ம் ஆண்டு திருப்பூரில் நடந்த கொலை வழக்கில் கைது செய்யப்பட்டார். பின்னர் அவருக்கு கோர்ட்டு இந்த வழக்கில் ஆயுள் தண்டனை விதித்தது.

இந்த நிலையில் யேசுதாஸ் கடந்த 2023ம் ஆண்டு முதல் கோவை மத்திய ஜெயிலில் அடைக்கப்பட்டார். ஜெயிலில் உள்ள கைதிகளுக்கு ஒவ்வொரு வேலை கொடுக்கப்படுவது வழக்கம்.

அதன்படி யேசுதாசுக்கு ஜெயிலில் உள்ள தொழிற்சாலையில் பணி ஒதுக்கப்பட்டு பணியாற்றி வந்தார்.

கடந்த 27ந்தேதி யேசுதாஸ், தொழிற்சாலையில் பணியில் ஈடுபட்டிருந்





தார். அன்று மதியம் கழிவறைக்கு செல்வதாக கூறி சென்றார். ஆனால் நீண்ட நேரமாகியும் அவர் திரும்பி வரவில்லை.

இதனால் சந்தேகம் அடைந்த காவலர்கள் கழிவறைக்கு சென்று பார்த்தனர். அப்போது அவர் அங்கு மயங்கிய நிலையில் கிடந்தார்.

அவரை மீட்டு கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த யேசுதாஸ் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார்.

இதுகுறித்து ரேஸ் கோர்ஸ் போலீசில் புகார் அளிக்கப்பட்டது. போலீசார் சந்தேக மரணம் என வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

யேசுதாஸ் மயங்கி விழுந்ததில், கழுத்து எலும்பில் முறிவு ஏற்பட்டு அழுத்தியதால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்ததாக முதற்கட்ட விசாரணையில் டாக்டர்கள் தெரிவித்ததாக போலீசார் கூறினர்.

இருப்பினும் அவர் எப்படி இறந்தார் என்பது குறித்து தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஜெயில் கைதி மரணம் அடைந்துள்ள நிலையில், பணியில் கவனக்குறைவாக இருந்ததாக கோவை மத்திய ஜெயில் துணை வார்டன் மனோரஞ்சிதம், உதவி வார்டன் விஜயராஜ், தலைமை காவலர்கள் பாபுராஜ், தினேஷ் ஆகிய 4 பேரை சஸ்பெண்டு செய்து ஜெயில் சூப்பிரண்டு செந்தில் குமார் உத்தரவிட்டுள்ளார்.

## உலகில் முதல்முறை: சென்னை மெட்ரோவில் ஒரே தூணில் 5 தண்டவாளங்கள்



சென்னை, ஜன.31

உலகிலேயே முதல்முறையாக, சென்னையில் ஒரேதூணில் 5 ரெயில் தண்டவாளங்களுடன் மெட்ரோ ரெயில் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை மெட்ரோ 2ம் கட்ட திட்டத்தில் ஒரே தூணில் 5 ரெயில் தண்டவாளங்களுடன் மெட்ரோ திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதன் திட்ட இயக்குநர் அர்ஜுனன் தெரிவித்துள்ளார்.

குறுகிய பாதையான வடபழனி முதல் போரூர் வரை உள்ள 4 கி.மீ. தொலைவுக்கு ஒரே தூணில் 4 ரெயில்கள் வந்து செல்லவும், ரெயில்கள் இடமாற்றிக் கொள்ள ஒரு லூப் லைனும் சேர்ந்து 5 தண்டவாளங்கள் இரட்டை அடுக்குகளாக அமைக்கப்படுவதாக அவர் கூறினார்.

## மேட்டூர் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறப்பு

சேலம், ஜன.31

மேட்டூர் அணையில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதம் 12ந் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறப்பது வழக்கம். அணையின் நீர் இருப்பை பொறுத்து ஜூன் மாதம் 12ந் தேதிக்கு முன்னதாகவோ அல்லது காலதாமதமாகவோ தண்ணீர் திறந்து விடப்படும். இவ்வாறு திறக்கப்படும் தண்ணீர் ஜனவரி மாதம் 28ந் தேதி வரை பாசனத்தின் தேவைக்கு ஏற்ப திறந்து விடப்படும்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் மேட்டூர் அணையின் நீர்இருப்பு குறைவாக இருந்ததால் வழக்கம் போல் ஜூன் மாதம் 12ந் தேதி மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. காலதாமதமாக ஜூலை மாதம் 28ந் தேதி அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது.

இந்தபாசனத்தின்மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம், கடலூர், மயிலாடுதுறை ஆகிய 12 மாவட்டங்களில் சுமார் 16 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்றது. இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் நேற்று மாலை 6 மணியுடன் நிறுத்தப்பட்டது. குடிநீர் தேவைக்காக 500 கனஅடி தண்ணீர் மட்டும் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்றுகாலைநிலவரப்படி 110.64 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 533 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது.

அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையில் 79.32 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

## PAN CARD விண்ணப்பிக்கும் இணையதளத்தில் தமிழ் மொழியும் சேர்க்கப்பட வேண்டும் விஜய் சேதுபதி

மதுரை, ஜன.31

மதுரையில் நடந்த வருமான வரித்துறையின் நிகழ்ச்சியில் பங்கேற்ற நடிகர் விஜய் சேதுபதி பேசியதாவது:

என்னை இந்த நிகழ்ச்சிக்கு அழைத்ததற்கு ரொம்ப நன்றி.

அரசின் திட்டங்களை தெரிந்து கொள்ள யாரை சென்று பார்க்க வேண்டும். எப்படி பார்க்கவேண்டும் என்பது கஷ்டமாக இருக்கும்.

நாம் எளிமையாக தெரிந்து கொள்ள, எல்லோருக்கும் புரியும் அளவிற்கு இணையதளத்தை ஆரம்பித்து வங்கி கணக்கு எப்படி ஆரம்பிப்பது, சிக்கல்கள் என்ன? என்று குழந்தைகளுக்கு புரிவதுபோல் கார்ட்டூன் வடிவத்தில் கொடுத்து இருப்பது சுவாரசியமாக இருந்தது.

பான் கார்டு விண்ணப்பிக்க வேண்டும் என்றால் அது இந்தி, ஆங்கிலத்தில் மட்டும் தான் உள்ளது. நிறைய பேருக்கு அது புரிவது கடினமாக உள்ளது. இது தமிழிலும் இருந்தால் புரிந்துகொள்ள சுலபமாக இருக்கும்.

உங்களின் இந்த முயற்சி எல்லோரும் எளிமையாக போய் சேர வேண்டும் என்பதற்கான முயற்சி தான். இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அது தமிழிலும் இருந்தால் இன்னும் எளிமையாக எல்லோருக்கும் போய்ச் சேரும்.

திடீரென்று ஏதாவது பிரச்சனை வரும்போது தான் அது என்ன பிரச்சனை என்று ஒரு படபடப்பில் அதை தெரிந்து கொள்வோம். அதற்கு முன்பே அது பற்றிய விளக்கமும் தெளிவும் நமக்கு புரியும் மொழியில் இருந்தால் நாம் இன்னும் தெளிவாக இருக்க முடியும் என்று நினைக்கிறேன்.

இல்லையென்றால் அதற்கும் ஒருவரை சார்ந்து



தான் இருக்க வேண்டியது இருக்கும். அது நிகழ்ந்தால் இன்னும் நன்றாக இருக்கும்.

இந்த முயற்சி ரொம்ப அற்புதமானது. வரிசெலுத்துவது மிகவும் முக்கியம். அவசியம். நம்முடைய உரிமைக்காக நமது அரசிடம் எப்படி கோரிக்கை வைக்கிறோமோ அதே போல் வரி செலுத்துவது நமது கடமை என்று முழுவதுமாக நம்புகிறேன்.

அதனால் இந்த முயற்சியை நான் வரவேற்கிறேன். மிகவும் கஷ்டப்பட்டு சம்பாதித்து வரி எல்லாம் கட்டுகிறோம். ஏதாவது benifit இருந்தால் நன்றாக இருக்கும். அதையும் யோசித்து பாருங்கள்.

நன்றாக சம்பாதிக்கும்போது வரி கட்டி இருப்போம். ஒரு காலத்திற்கு மேல் வருமானம் இல்லாமல் போய் நிலைமை சரியில்லாமல் போனால் நல்ல tax payer ஆக ஒரு சிட்டிசனாக வரி கட்டி இருந்தால் அவருக்கு என்று சில benefits இருக்கலாமே என்று தோன்றுகிறது. இதையும் நீங்கள் consider செய்ய வேண்டும்.

ஷூட்டிங் நடுவில் வந்துள்ளேன். இங்கிருந்து திருச்சிக்கு செல்ல வேண்டும். எல்லாரையும் சந்தித்ததில் பெரும் மகிழ்ச்சி. நன்றி. தமிழ்த்தாய் வாழ்த்து பாடி ஆரம்பித்தது எனக்கு சந்தோஷமாக இருந்தது.

இவ்வாறு அவர் பேசினார்.

## கச்சத்தீவு அந்தோணியார் ஆலய திருவிழா மார்ச் 14, 15ந் தேதிகளில் நடக்கிறது



ராமேசுவரம், ஜன.31

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட நடுக்கடல் பகுதியில் கச்சத்தீவு உள்ளது.

ராமேசுவரம் பகுதியில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவு பகுதியில் இருந்து 18 கடல் மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இந்த ஆலய திருவிழா பிப்ரவரி அல்லது மார்ச் மாதங்களில் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் இலங்கையில் யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் ஜோசப்தாஸ் ஜெபரத்தினம் இமெயில் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி உள்ளார். இந்த கடிதமானது, சிவகங்கை மதுரை மாவட்ட பிஷப் லூர்து ஆனந்தம் மற்றும் ராமேசுவரம் வேர்க்கோடு பங்குத்தந்தை ஆகியோருக்கு வந்துள்ளது.

அந்த கடிதத்தில் இந்த ஆண்டு கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா வருகிற மார்ச் 14 மற்றும் 15 ஆகிய 2 நாட்கள் நடைபெறுவதாகவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும், இந்தியாவில் இருந்தும் பக்தர்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மார்ச் 14ந்தேதி மாலை ஆலயத்தின் முன்புள்ள கொடிமரத்தில் கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்குகிறது. தொடர்ந்து ஆலயத்தை சுற்றி சிலுவை பாதை திருப்பலியும், அன்று இரவு திருவிழா திருப்பலியும் நடக்கிறது. இரவு 9 மணி அளவில் அந்தோணியார் தேர் பவனி நடைபெறுகிறது.

மறுநாள் (மார்ச் 15ந்தேதி) காலை 7 மணி அளவில் திருவிழா திருப்பலி தொடங்குகிறது. சுமார் 2 மணி நேரத்திற்கு மேலாக நடைபெறும் இந்த பிரார்த்தனையில் இந்தியா, இலங்கையைச் சேர்ந்தவர்களும், இருநாட்டு பங்குத் தந்தைகளும் கலந்து கொள்வார்கள்.

இதுகுறித்து நெடுந்தீவு பங்குத்தந்தை அசோக் வினோ கூறியதாவது: கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா குறித்து யாழ்ப்பாணம் மறை மாவட்ட பிஷப் மூலம் அழைப்பிதழ் வந்துள்ளது. இந்த அழைப்பிதழை ராமநாதபுரம் மாவட்ட கலெக்டரை நேரில் சந்தித்து கொடுத்து கச்சத்தீவு ஆலய திருவிழாவிற்கு மக்கள் வருவதற்கு அனுமதி வழங்கி, அதற்கான ஏற்பாடுகள் செய்து தர வேண்டும் என கேட்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

கடந்தஆண்டுஇலங்கை அரசு, இலங்கை கடற்படையை கண்டித்து மீனவர்கள் போராட்டம் நடத்தி வந்ததால் கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவை புறக்கணித்து, தமிழகத்தில் இருந்து மீனவர்கள் உள்பட யாரும் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## அடிப்படை வசதிகள் கேட்டு உடுமலை அரசு கல்லூரி மாணவர்கள் `திடீர்' போராட்டம்

உடுமலை, ஜன.31

திருப்பூர் மாவட்டம் உடுமலை அரசு கலைக் கல்லூரியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இந்தநிலையில் கல்லூரியில் அடிப்படை வசதிகளான குடிநீர் குழாய், கழிப்பிடம்மற்றும்விளையாட்டு மைதானம் பராமரிப்பு இல்லாமல் உள்ளதாக கல்லூரி நிர்வாகத்திடம் மாணவர்கள் புகார் செய்தனர்.

ஆனால் சீரமைக்க நட



வடிக்கை எடுக்காததால் இன்று காலை கல்லூரி மாணவர்கள் ஆயிரத்திற்கும்மேற்பட்டோர்வகுப்புகளை புறக்கணித்து கல்லூரி முன்பு தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். இதுகுறித்து மாணவர்கள் கூறியதாவது:

மாணவர்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்றுவதில் கல்லூரிநிர்வாகம்தொடர்ந்து அலட்சியம் காட்டி வருகின்றது.

எனவே இனியும் அலட்சியம் காட்டாமல் குடிநீர் மற்றும் கழிப்பிடம் வசதியை உடனே செய்து தர வேண்டும். இல்லாவிடில் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## மதுபோதையில் ஏற்பட்ட விபத்தில் 12 ஆயிரம் பேர் உயிரிழப்பு? தமிழக அரசு விளக்கம்

சென்னை, ஜன.31

"நாட்டிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகபட்சமாக 64,105 சாலை விபத்துகளில் 18,844 பேர் இறந்துள்ளனர். அதில், 12 ஆயிரம் பேர் மது குடித்து சாலை விபத்தில் இறந்துள்ளனர் என்று மத்திய மந்திரி நிதின் கட்கரி தெரிவித்துள்ளார். அதேபோல, தமிழ்நாடு மாநில குற்ற ஆவண காப்பகமும் வெளியிட்ட அறிக்கையில் சாலை விபத்துகளில் 18,074 பேர் இறந்துள்ளனர். அதில் 13,500 பேர் மதுபோதையில் சாலை விபத்தில் இறந்துள்ளனர்" என்று கூறியுள்ளதாக சமூக வலைதளங்களில் ஒரு வீடியோ பரவி வருகிறது.

இதற்கு தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில், "இது முற்றிலும் பொய்யான தகவல். கடந்த 2024ம் ஆண்டு மத்திய மந்திரி நிதின் கட்கரியின் உரையில், தமிழ்நாட்டில் 12 ஆயிரம் பேர் மது குடித்து சாலை விபத்தில் இறந்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. 2022ம் ஆண்டில் மது குடித்து நிகழ்ந்த சாலை விபத்துகளில் இந்திய அளவில் மொத்தமே 10,080 விபத்துகளும், 4,201 இறப்புகளும் நடந்துள்ளன.

இதேபோல், மாநில குற்ற ஆவண காப்பக அறிக்கையிலும் 13,500 பேர் இறந்ததாக எங்கும் குறிப்பிடவில்லை. கடந்த 2024ம் ஆண்டில் மதுபோதையில் வாகனம் ஓட்டியதாக 12,306 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த எண்ணிக்கையை வைத்து 12 ஆயிரம் பேர் மதுபோதையில் சாலை விபத்தில் இறந்ததாக பொய்யான தகவல் பரப்பப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் கல்லூரி மாணவர்களை மிரட்டிய போலீஸ்காரர்: நெல்லையில் பரபரப்பு

நெல்லை, ஜன.31

நெல்லை மாவட்டம் கங்கைகொண்டான் போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வரும் முதல் நிலை காவலர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு மானூர் பகுதியில் உள்ள ஒரு ஓட்டலில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தார். அவர் மது போதையில் இருந்ததாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவர் எதிரே உள்ள மேஜையில் சாப்பிட வந்த 4 கல்லூரி மாணவர்களை பார்த்து, எதற்காக என்னை முறைத்து முறைத்து பார்க்கிறீர்கள். நான் யார் என்று தெரியுமா?. மரியாதையாக சென்று விடுங்கள். இல்லை என்றால் உங்கள் முகத்தை உடைத்து விடுவேன் என்று கூறி மிரட்டியுள்ளார்.

இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. அதன் பின்னர் அவர் தனது மோட்டார் சைக்கிளில் அங்கிருந்து சென்று விட்டாராம்.

இதுகுறித்து விசாரித்த போது அந்த போலீஸ்காரர் கடந்த ஒரு வாரமாக மருத்துவ விடுப்பில் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து அந்த கல்லூரி மாணவர்களின் ஒருவரின் பெற்றோர் இதுபற்றி மானூர் போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தனர். மது போதையில் கல்லூரி மாணவர்களுக்கு போலீஸ்காரர் ஒருவர் மிரட்டல் விடுத்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# தை அமாவாசை: ராமேசுவரம் அக்னி தீர்த்தக்கடலில் லட்சக்கணக்கான பக்தர்கள் புனித நீராடினர்



ராமேஸ்வரம், ஜன.31

ராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரத்தில் ராமநாத சுவாமி கோவில் இந்துக்களின் தீர்த்த மூர்த்தி ஸ்தலமாக விளங்கி வருகிறது. ஆடி அமாவாசை, தை அமாவாசை மற்றும் மஹாளய அமாவாசை நாட்களில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் இங்கு வருகை தந்து அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி முன்னோர்களுக்கு திதி கொடுப்பது வழக்கம். அவ்வகையில், இன்று தை அமாவாசையை முன்னிட்டு அக்னி தீர்த்த கடலில் லட்சக்கணக்கான மக்கள் புனித நீராடி முன்னோர்களுக்கு திதி கொடுத்தனர்.

இதற்காக தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்கள், வெளி மாநிலங்களில் இருந்து ராமேஸ்வரத்திற்கு நள்ளிரவு முதல் ஆயிரக்கணக்கான வாகனங்கள் மற்றும் அரசு பேருந்துகளில் பக்தர்கள் வரத் தொடங்கினர். அதிகாலையில் அவர்கள் அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடினர். தொடர்ந்து கடற்கரை உள்ளிட்ட பகுதிகளில் மணற்பரப்பில் அமர்ந்து முன்னோர்களுக்கு திதி மற்றும் தர்ப்பணம் கொடுத்து வழிபட்டனர்.

இதனைத்தொடர்ந்து, மீண்டும் அக்னி தீர்த்தக் கடலில் நீராடிவிட்டு, ராமநாதசுவாமி கோவிலில் உள்ள 22 தீர்த்த கிணறுகளில் புனித நீராடி ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்பாளை தரிசனம் செய்தனர். தை அமாவாசையையொட்டி ஒரே நாளில் லட்சக்கணக்கான பக்தர்கள் ராமேஸ்வரம் வந்துள்ளதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் எதுவும் ஏற்படாமல் இருக்க ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தை அமாவாசையை முன்னிட்டு ராமநாதசுவாமி கோவில் அதிகாலை 4 மணிக்கு நடை திறக்கப்பட்டு காலை 5 மணி முதல் 5.30 வரை ஸ்படிகலிங்க பூஜையும், அதனை தொடர்ந்து சாயரட்சை பூஜை வரையிலான காலபூஜைகள் நடைபெற்றது. காலை 11மணிக்குமேல்சுவாமி, அம்பாள் பஞ்சமூர்த்திகள் சகிதம் புறப்பாடாகி பகல் 12.10 மணிக்கு அக்னி தீர்த்த கடற்கரைக்கு எழுந்தருளினர். அங்கு தீர்த்தவாரி உற்சவம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பகல் முழுவதிலும் கோவில் நடை திறந்திருந்தது. மாலை 5.30 மணிக்கு மண்டகப்படியில் தீபாராதனை நடைபெற்று இரவு 7 மணிக்கு சுவாமி, அம்பாள் பஞ்சமூர்த்திகள் மற்றும் ஸ்ரீ ராமர் வெள்ளி ரத புறப்பாடு வீதி உலா நடைபெறுகிறது.

# 11 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை: பள்ளி மாணவர்கள் 3 பேர் கைது

ஓசூர், ஜன.31

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் பகுதியை சேர்ந்த 11 வயது சிறுமி அங்குள்ள அரசு பள்ளியில் 6ம் வகுப்பு படித்து வருகிறாள்.

இந்த சிறுமியை, அரசு பள்ளியில் முறையே 9, 10 மற்றும் பிளஸ்1 படிக்கும் 3 மாணவர்கள், தனியாக அழைத்துச் சென்று பாலியல் தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து சிறுமியின் தாயார் ஓசூர் அனைத்து மகளிர் போலீசில் புகார் செய்தார். அதன் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து 3 மாணவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 3 மாணவர்களும் சிறுவர்கள் என்பதால் சேலத்தில் உள்ள சிறார் கூர்நோக்கு மையத்தில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திருவண்ணாமலை கிரிவலப்பாதையில் புதிதாக தர்கா? தமிழக அரசு விளக்கம்



சென்னை, ஜன.31

திருப்பரங்குன்றம் மலை தர்கா விவகாரம் புயலை கிளப்பியுள்ளது. அந்த விவகாரம் பற்றிய அனல் இன்னும் அடங்காத சூழலில், 'திருவண்ணாமலை அண்ணாமலையாருக்கு சொந்தமான கிரிவலப்பாதையில் புதிதாக தர்கா முளைத்துள்ளது. இப்போது தர்கா... அடுத்து வக்பு சொத்து... அடுத்து அந்த மலையே தர்காவுக்கு சொந்தம் என்று சொல்வார்கள்...' என குறிப்பிட்டு வீடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இதற்கு தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சமூக ஊடக கணக்கான தகவல் சரிபார்ப்பகம் விளக்கம் அளித்துள்ளது. அதில் "இது முற்றிலும் பொய்யான தகவல். தர்கா அமைந்துள்ள இடமானது கோவிலுக்கு தொடர்புடையது அல்ல என்றும், சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக தர்கா இருப்பதாகவும் திருவண்ணாமலை நகர நில அளவை பதிவேட்டின்படி தெரியவருகிறது. நகர கணக்கெடுப்பு பதிவேட்டில் குறிப்பு காலத்தில் மசூதி கட்டிடம்எனகுறிப்பிடப்பட்டு உள்ளது.

எனவே சமூக வலைத்தளங்களில் கோவில் இடம் குறித்து பரவி வரும் தகவலானது முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும் என்று அருணாசலேசுவரர் கோவில் செயல் அலுவலர் விளக்கம் அளித்துள்ளார் " என்று கூறப்பட்டுள்ளது.

# ஆட்டோக்களில் கூடுதல் கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை போக்குவரத்துத் துறை

சென்னை, ஜன.31

தமிழகத்தில் ஆட்டோ சங்கங்கள் சமீபத்தில் கட்டணத்தை உயர்த்தி அறிவித்திருந்தன. அதன்படி, ஆட்டோவில் பயணம் செய்வோர்முதல்2கிலோ மீட்டருக்கு ரூ. 50, அடுத்த ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ. 18 என்ற அளவில் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலும் இரவு நேரங்களில் பயணித்தால் பகல் நேரத்தைவிட கூடுதலாக 50 சதவீத கட்டணம் வசூலிக்கப்படும் என்றும் இது அடுத்த மாதம் (பிப்ரவரி) 1ம் தேதி முதல் அமலுக்கு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆட்டோக்களில் கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டால் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் புகார் அளிக்கலாம் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக போக்குவரத்துத்துறை ஆணையர் வெளியிட்டுள்ள விளக்கத்தில், "ஆட்டோ கட்டணத்தை உயர்த்துவது தொடர்பாக அரசு இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை. ஆட்டோ கட்டணத்தை உயர்த்துவது தொடர்பான முடிவு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆட்டோ சங்கங்கள் தன்னிச்சையாக கட்டணத்தை உயர்த்த முடியாது.

சில ஆட்டோ சங்கங்கள் பிப்.1 ம் தேதி முதல் கட்டணத்தை உயர்த்த உள்ளதாக கவனத்திற்கு வந்ததுள்ளது. ஆட்டோக்கள் கூடுதல் கட்டணம் வசூலித்தால் வட்டார போக்குவரத்து அலுவலர்களிடம் புகார் அளிக்கலாம். புகாரின் அடிப்படையில் கூடுதல் கட்டணம் வசூலிக்கும் ஆட்டோ ஓட்டுநர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரோடு இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி தொடக்கம்



ஈரோடு, ஜன.31

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தி.மு.க., நாம் தமிழர் கட்சி வேட்பாளர் உள்பட 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இந்த தொகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு வசதியாக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய தேர்தல் ஆணைய அறிவுரையின்படி மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு கணினி முறையில் ஆணைய இணையதளத்தின் மூலம் கடந்த 13 ந்தேதி அன்று 20 சதவீதம் மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி மற்றும் 30 சதவீதம் வி.வி.பேடு கருவி சேர்த்து தற்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரம் 284, கட்டுப்பாட்டு கருவி 284, வி.வி.பேடு கருவி 308 கணினி சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதனை தொடர்ந்து ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால், இந்திய தேர்தல் ஆணையத்தின் மூலம் கணினி துணை சுழற்சி முறையில் கூடுதலாக 568 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதன்மூலம் 852 வாக்குப்பதிவு எந்திரங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன.

இந்த நிலையில், ஈரோடு இடைத்தேர்தலையொட்டி 852 வாக்குப்பதிவு எந்திரங்களில் பெயருடன் கூடிய சின்னம் பொருத்தும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது.

தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் முன்னிலையில் இந்தப் பணி நடைபெறுகிறது.

# சிறுவர்களுக்கு பாலியல் தொல்லை: யூடியூபர் திவ்யா கைது

சென்னை, ஜன.31

சமூக வலைதள வீடியோக்களில் வித்தியாசமான செய்கைகள் மூலம் பலரும் பிரபலமாகி வருகின்றன. அந்த வகையில் பிரபலமானவர்தான் திவ்யா கள்ளச்சி. கார்த்திக் ஐ லவ் யூ.. கார்த்திக் மாமா.. என கார்த்திக் என்ற நபர் தன்னைகாதலித்து ஏமாற்றிவிட்டதாகவும், அவரை தேடி வருவதாகவும் இன்ஸ்டாகிராமில் தொடர்ந்து வீடியோ வெளியிட்டு பிரபலமானார் இவர்.

இவர் தமிழ் தொலைக்காட்சியில் விவாத நிகழ்ச்சியிலும் பேசி வந்தார். இவரது வீடியோக்கள் பலராலும் கிண்டல் செய்யப்பட்டு வந்ததை பாசிட்டிவ்வாக கொண்டு, அடுத்தடுத்து வீடியோ போட்டு பிரபலாகி அதிக பணம் சம்பாதிக்க ஆரம்பித்தார்.

இந்நிலையில் ஸ்ரீவில்லிபுத்தூரில் சிறுவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக யூடியூபர் திவ்யா உள்ளிட்ட 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்படி ஸ்ரீவில்லிபுத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் திவ்யா கள்ளச்சி தனது மூன்று நண்பர்களுடன் பாலியல் சீண்டலில் ஈடுப்பட்டதாக குழந்தை நல அலுவலர் மீனாட்சி புகார் அளித்துள்ளார். இது தொடர்பான அந்த புகாரில், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியை சேர்ந்த இரண்டு சிறுவர்களை திவ்யா கள்ளச்சி, சித்ரா, ஆனந்த் மற்றும் கார்த்தி ஆகிய 4 பேரும் பாலியல் சீண்டலில் ஈடுபட வைத்ததாகவும், அதனை படம்பிடித்து அதன்மூலம் பணம் திரட்ட முயற்சித்ததாகவும் அதில் தெரிவித்திருந்தார். இந்த புகாரின் பேரில் போலீசார் அந்த நால்வர் மீதும் போக்சோ உட்பட 6 பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்தனர். கைது செய்யப்பட்ட அவர்களிடம் போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரசு பள்ளி வகுப்பறைக்குள் மனிதக் கழிவு வீச்சு: போலீசார் விசாரணை



பல்லடம், ஜன.31

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே அரசுப் பள்ளியின் வகுப்பறைக்குள் அடையாளம் தெரியாத நபர்கள் மனிதக் கழிவை வீசிச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

பல்லடம் அருகே காமநாயக்கன்பாளையம் அரசு பள்ளியில் 10ம் வகுப்பு வகுப்பறைக்குள் மர்ம நபர்கள் மனிதக் கழிவை வீசிச்சென்றதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பள்ளி மாணவர்களே இச்செயலில் ஈடுபட்டார்களா? அல்லது மர்ம நபர்களா? என்பது குறித்து பல்லடம் டி.எஸ்.பி. தலைமையிலான காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் மாதாந்திர பார்க்கிங் பாஸ்கள் நிறுத்தம்



சென்னை, ஜன.31

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாகனம் நிறுத்தும் இடங்களுக்கான தேவை அதிகரித்து வருவதைக்கருத்தில் கொண்டு, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் 01.02.2025 முதல் வாகனம் நிறுத்தத்திற்கான மாதாந்திர பார்க்கிங் பாஸ்கள் வழங்குவதை நிறுத்த முடிவு செய்துள்ளது. அனைத்து மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் வாகனம் நிறுத்தும் இடங்கள் இனி பயன்படுத்தப்படும். பயணிகள் தங்களது நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் இரு சக்கர வாகனங்களை நிறுத்த இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ளவும், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு தங்கள் ஆதரவைத் தொடரவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஜனவரி 2025இல் வாகனம் நிறுத்துவதற்காக ஏற்கனவே வாங்கப்பட்ட மாதாந்திர பார்க்கிங் பாஸ்கள் அவற்றின் செல்லுபடியாகும் காலம் முடியும் வரைஅனுமதிக்கப்படும்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயணஅட்டை விற்பனை மற்றும் ரீசார்ஜ் செய்யும்வசதி முதற்கட்டமாக 11 மெட்ரோ ரெயில் நிலையங்களில் நிறுத்தம்

மெட்ரோ ரெயிலில் பயணிக்க சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயண அட்டையுடன் கூடுதலாக 14.4.2023 முதல் தேசிய பொது போக்குவரத்து அட்டையை (சிங்கார சென்னை அட்டை) சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. 01.04.2025 முதல் எஸ்.பி.ஐ வழங்கிய தேசிய பொது போக்குவரத்து அட்டைக்கு (சிங்கார சென்னை அட்டை) முழுமையாக மாற சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. அதன்படி, 41 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் படிப்படியாக சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயண அட்டைகளை ரீசார்ஜ் செய்யும் வசதி நிறுத்தப்படுகிறது.

முதல் கட்டமாக, புதிய வண்ணாரப்பேட்டை, காலடிப்பேட்டை, திருவொற்றியூர் தேரடி, திருவொற்றியூர், நந்தனம், சின்னமலை, OTA நங்கநல்லூர் சாலை, மீனம்பாக்கம், எழும்பூர், கீழ்ப்பாக்கம் மற்றும் செனாய்நகர் ஆகிய 11 மெட்ரோ ரெயில் நிலையங்களில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயண அட்டை விற்பனை / ரீசார்ஜ் செய்யும் வசதி நிறுத்தப்படுகிறது.

அதன்படி, மேற்கூறிய மெட்ரோ ரெயில் நிலையங்களில் சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பயண அட்டையை ரீசார்ஜ் செய்ய திட்டமிட்டுள்ள பயணிகள், தங்களது பயண அட்டையில் உள்ள மீதித் தொகையை மெட்ரோ ரெயில்களில் பயணிப்பதற்கு அல்லது மெட்ரோ ரெயில் நிலையங்களில் வாகனம் நிறுத்துவதற்கு பயன்படுத்திவிட்டு, மேலும் பயன்பாட்டிற்காக தேசிய பொது போக்குவரத்து அட்டையை (சிங்கார சென்னை அட்டை) பெற அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.23.5 கோடி மதிப்பிலான கஞ்சா பறிமுதல் 3 பேர் கைது

சென்னை, ஜன.31

சென்னை விமான நிலையத்திற்கு போதைப்பொருள் கடத்தி வரப்படுவதாக சுங்கத்துறை அதிகாரிகளுக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதன் அடிப்படையில் விமான நிலைய அதிகாரிகள் கண்காணிப்பு பணிகளை தீவிரப்படுத்தினர்.

இந்நிலையில், தாய்லாந்து நாட்டில் இருந்து சென்னை விமான நிலையத்திற்கு வந்திறங்கிய பயணிகளிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சுமார் ரூ.23.5 கோடி மதிப்புள்ள கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பாக சுங்கத்துறை அதிகாரிகள் 3 பேரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# குதிரையேற்றம்: வெற்றி பெற்ற வீரர்களுக்கு துணை முதல்அமைச்சர் உதயநிதி வாழ்த்து



சென்னை, ஜன.31

துணை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

பெங்களூருவில் நடைபெற்ற உலக குதிரையேற்றக் கூட்டமைப்பின் Federation Equestre Internationale's World Dressage Challenge2024, தமிழ்நாட்டிலிருந்து பங்கேற்று பதக்கங்களை குவித்த வீரர் வீராங்கனையரை நேரில் சந்தித்து வாழ்த்தினோம். குறிப்பாக, தங்கை மிராயா தாதாபோய் தங்கப் பதக்கத்தை வென்று சாதனைப் படைத்ததோடு ஆசியாவின் Best Youth Rider பட்டத்தையும் பெற்றுள்ளார். மேலும், உலக குதிரையேற்ற தரவரிசையில் ஐந்தாம் இடத்தையும் பிடித்து தமிழ் நாட்டுக்கு அவர் பெருமை சேர்த்துள்ளார்.

அவர் உட்பட குதிரையேற்றத்திலும் வெற்றிக்கொடி நாட்டிய தமிழ்நாட்டு வீரர் வீராங்கனையரின் சாதனைகள் தொடர வாழ்த்தி மகிழ்ந்தோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈ.சி.ஆர். சம்பவம்: தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் விளக்கம்

சென்னை, ஜன.31

தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்;

ஈசிஆர் ரோட்டில் ஒரு காரில் சென்ற பெண்களை வேறொரு காரில் சென்ற ஆண் நபர்கள் துரத்திசென்று தொல்லை கொடுத்ததாகசிலசேனல்களில் வந்த செய்திக்கு விளக்கம்.

கடந்த 26.01.2025 அன்று செல்வி சின்னி திலங் என்ற பெண் கானத்தூர் காவல் நிலையத்தில் ஆஜராகி 25.01.2025 அன்று நள்ளிரவு சுமார் 02.00 AM அளவில் தான் (TN13S5466) என்றகாரில் முட்டுகாடு பாலம் அருகே வந்த போது இரண்டு கார்களில் (TN 75E6004, TN09BR9988) வந்த 78 நபர்கள் திடீரென வழி மறித்துள்ளனர்.

அங்கு நிற்காமல் தனது வீட்டிற்கு சென்ற செல்வி சின்னி திலங் என்பவரை இரண்டு கார்களில் வந்த நபர்கள் துரத்தி சென்று கானத்தூரில் உள்ள அவரது வீட்டருகே நிறுத்தி பிரச்சனை செய்து அவர்களது காரைசெல்விசின்னி திலங் என்பவர் கார் இடித்துவிட்டு நிற்காமல் சென்றதாக கூறி உள்ளார்கள்.

மேலும் மேற்படி காரை இடித்துவிட்டு நிற்காமல் சென்றதற்காக செல்வி சின்னி திலங் என்பவர் வந்த காரை துரத்தியதாகவும் அந்த பிரச்சனையை தீர்த்து வைப்பதற்காக வந்ததாக கூறியதை செல்வி சின்னி திலங் தரப்பு மறுத்துள்ளது.

மேற்படி புகாரின் பேரில் கானத்தூர் காவல் நிலைய மனு ரசீது எண் 22/2025நாள்26.01.2025 வழங்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு தொடர்ந்து கானத்தூர் காவல் நிலைய குற்ற எண். 16/2025 u/s 126(2), 296(b), 324(2), 351(2) BNS r/w 4 of TNPHW Act பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி குற்றவாளிகளை விரைந்து கைது செய்யவும் குற்றவாளிகள் பயன்படுத்திய கார்களை பறிமுதல் செய்யவும் அதன் தொடர்பியான ECR சாலையில் உள்ள CCTV காட்சிகளை ஆய்வு செய்து துரித புலன்விசாரணை செய்ய மூன்று தனிப்படைகள் அமைக்கப்பட்டு புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரூப் 2, 2ஏ முதன்மைத் தேர்வு ஹால் டிக்கெட்களை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது

சென்னை ஜன.31

குரூப் 2 முதன்மை தேர்வுகளுக்கான நுழைவு சீட்டை (ஹால் டிக்கெட்) விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) தெரிவித்துள்ளது. ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுII பணிகளுக்கான முதல்நிலை தேர்வு 14.09.2024 அன்று நடைபெற்றது.

அந்த தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான முதன்மைத் தேர்வு பிப்.8 மற்றும் 23ம் தேதி நடைபெறவுள்ளது. அந்த தேர்வுகளுக்கான ஹால் டிக்கெட்டை டிபிஎஸ்சி வெளியிட்டுள்ளது. இத்தேர்வுகளைஎழுத தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதா ரர்களின் நுழைவு சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.inல் பதிவிறக்கம் செய்து கொள்ள வலியுறுத்தப்பட்டுள்ளது.விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவேற்றம் (OTR DASH BOARD) மூலமாக மட்டுமே அவர்களது விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து ஹால்டிக்கெட்டைபதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்ற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் (TNPSC) தெரிவித்துள்ளது.

# பட்டியலின மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்திட்டம்: தமிழக அரசு தகவல்

சென்னை, ஜன.31

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது;

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களுக்கு பரிசுத்தொகை வழங்குவதற்கு பதிலாக, அவர்களின் வேலை வாய்ப்புக்கான திறன்களை வளர்த்து பொருளாதார ரீதியாக ஊக்குவிக்கும் வகையில் அவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) ரூ.12,000/, ரூ.15,000/ மற்றும் ரூ.25,000/ என மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படும். இத்திட்டத்திற்கான நெறிமுறைகளை https://cms.tn.gov.in/cms_migrated/document/GO/adtw_t_90_ms_2024.pdf மற்றும் https://cms.tn.gov.in/cms_migrated/document/GO/adtw_t_5_ms_2025.pdf என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். தற்போது, பணவுறுதி ஆவணம் (Skill Vouchers) வழங்க உயர்திறன் ஊக்கத் திட்டத்தினை 20242025 ஆம் ஆண்டில் செயல்படுத்த இத்திட்ட த்திற்கான இணையவழிவிண்ணப்பம் நேற்றிலிருந்து விண்ணப்பிக்க விரும்பும் மாணாக்கர் https://ee.kobotoolbox.org/x/nMU1hMpq என்ற இணைப்பில் நேரடியாக 28.02.2025க்குள் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேற்கண்ட விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து அவர்களை இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்க, அறிவுறுத்துமாறு தொடர்புடைய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சென்னையில் 16,370 மெட்ரிக் டன் கட்டிட இடிபாட்டு கழிவுகள் அகற்றம்

சென்னை, ஜன.31

சென்னையில் 16,370 மெட்ரிக் டன் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டுள்ளது. சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நாள்தோறும் 5,900 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது. தண்டையார்பேட்டை உள்ளிட்ட 7 மண்டலங்கள் முழுவதும் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்றும் வகையில் தூய்மைப் பணி மேயரால் கடந்த 7ம் தேதி தொடங்கி வைக்கப்பட்டது. 16ம் தேதி வரை 7 மண்டலங்களிலும்,

2ம் கட்டமாக 17ம் தேதி முதல் திருவொற்றியூர் உள்ளிட்ட 8 மண்டலங்கள் உட்பட அனைத்து 15 மண்டலங்களிலும் தீவிரமாக கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இதன் மூலம் சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் 16,370.02 மெட்ரிக் டன் கட்டிட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது.


# மூணாறு வனப்பகுதியில் காட்டுத்தீ பரவாமல் தடுக்க நடவடிக்கை

மூணாறு, ஜன.31

மூணாறில் கோடைக்காலம் தொடங்கி விட்டால், வனப்பகுதியில் சிலர் தீ வைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இதனால் வனப்பகுதியில் மரங்கள், செடிகள்அழிந்துவிடுகிறது. அந்த பகுதியில் உள்ள வன விலங்குகளுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க வனத்துறையினர் பல்வேறு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மலைப்பகுதியில் உள்ள புல்மேடுகளில் காட்டுத்தீ பிடிக்காமல் இருப்பதற்காக வனத்துறையினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.


அதில் முதல் கட்டமாக இரவிக்குளம் தேசிய வனச்சரணாலயம் பகுதியில் ஆனைமுடி என்னுமிடத்தில் காய்ந்த புற்களை வனத்துறையினர் நேரடி கண்காணிப்பில் தீ வைத்து



வருகின்றனர்.

இதுகுறித்து இரவிக்குளம் தேசிய வனச்சரணாலய இணைவார்டன்நிதின்லால் கூறுகையில், வனப்பகுதியில் காய்ந்த புற்களில் தீ வைப்பதால் அவை எரிந்து விடும். பின்னர் அந்த பகுதியில் புதிய புற்கள் முளைக்கும். அந்த புற்கள் வரையாடுகளுக்கு உணவாக பயன்படும். மேலும் காட்டுத்தீ பரவாமல் தடுக்க முடியும், என்றார்.

# 2கே லவ் ஸ்டோரி படத்தின் 3வது பாடல் வெளியீடு




வெண்ணிலா கபடிக்குழு படம் மூலமாக இயக்குனராக அறிமுகமான சுசீந்திரன் "நான் மகான் அல்ல, பாண்டிய நாடு, ஆதலால் காதல் செய்வீர், ஜீவா, ஈஸ்வரன்" உள்ளிட்ட பல படங்களை இயக்கியுள்ளார். இவர் தற்போது இன்றைய நவ நாகரீக இளைஞர்களின் வாழ்வை சொல்லும் படமாக, ரொமான்ஸ் ஜானரில் உருவாகியுள்ள '2கே லவ் ஸ்டோரி' என்ற படத்தை இயக்கியுள்ளார். இன்றைய இளம் தலைமுறையின் காதல், நட்பு என அவர்களது வாழ்வை பிரதிபலிக்கும் படைப்பாக இந்த படம் உருவாகியுள்ளது.

சிட்டி லைட் பிக்சர்ஸ் தயாரித்துள்ள இந்த படத்துக்கு டி.இமான் இசையமைத்துள்ளார். புதுமுக நாயகன் ஜெகவீர் நாயகனாக நடித்துள்ள இந்த படத்தில் மீனாட்சி கோவிந்தராஜன் நாயகியாக நடித்துள்ளார். மேலும் பால சரவணன், ஆண்டனி பாக்யராஜ், ஜெயபிரகாஷ், வினோதினி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சமீபத்தில் '2கே லவ் ஸ்டோரி' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் மற்றும் டீசர் வெளியாகி வைரலானது. இந்த படத்துக்கு தணிக்கை குழு 'யு' சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த நிலையில், தற்போது இப்படத்தின் 3வது பாடல் 'வேதாள கதை' என்ற பாடல் வெளியாகி உள்ளது. இந்த பாடலை மரியா ரோ வின்சென்ட் மற்றும் அனுஜ் மேத்யூ இணைந்து பாடியுள்ளனர். பாடல் வரிகளை கார்த்திக் நேதா எழுதியுள்ளார். இது குறித்த பதிவை இசையமைப்பாளர் டி.இமான் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# 'குட் பேட் அக்லி' படத்தில் இணைந்த பிரபல மலையாள நடிகர்






ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகர் அஜித் குமார் தனது 63வது படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்துக்கு 'குட் பேட் அக்லி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தபடத்தில்அஜித்துடன் இணைந்து திரிஷா, பிரசன்னா, சுனில், அர்ஜுன் தாஸ், பிரபு உள்ளிட்ட பலரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். சமீபத்தில் இந்த படத்தின் பர்ஸ்ட் லுக் மற்றும் செகன்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்த படத்திற்கு இசையமைக்க இருந்த தேவிஸ்ரீ பிரசாத் விலகிய நிலையில், அவருக்கு பதிலாக தற்போது பிரபல இசையமைப்பாளர் ஜி.வி பிரகாஷ் இப்படத்திற்கு இசையமைப்பார் என்று கூறப்படுகிறது. அதனை தொடர்ந்து இப்படத்திற்கான டப்பிங் பணியை சமீபத்தில் நடிகர் அஜித்குமார் நிறைவு செய்துள்ளார். இப்படம் வருகிற ஏப்ரல் 10ம் தேதி வெளியாக உள்ளது. தற்போது இப்படத்தின் பின்னணி வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கிடையில், 'குட் பேட் அக்லி' படத்தின் ஒரு சில காட்சிகள் மட்டும் படமாக்கப்பட உள்ளன. அதற்கான படப்பிடிப்பு பணிகள் நேற்று தொடங்கப்பட்டுள்ளன. அப்போது பிரபல மலையாள நடிகர் ஷைன் டாம் சாக்கோ படப்பிடிப்பு பணியில் ஈடுபட்டுள்ளார். இவர் படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார் என்ற தகவல் வெளியாகி உள்ளது. இவருடைய சில காட்சிகள் படமாக்கப்பட்டு வருவதாகவும் தற்போதைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அபர்ணதி நடிக்கும் 'வெஞ்சென்ஸ்' படத்தின் பர்ஸ்ட் லுக் வெளியீடு






சின்னத்திரையில் 'எங்க வீட்டு மாப்பிள்ளை' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கவனம் பெற்றவர் நடிகை அபர்ணதி. இதைத்தொடர்ந்து 'தேன்', 'ஜெயில்' போன்ற படங்களின் மூலம் ரசிகர்கள் மத்தியில் பிரபலமானார். இந்த இரண்டு படங்களுக்காக பல்வேறு விருதுகளை வென்றார். இதையடுத்து அபர்ணதி 'இறுகப்பற்று' படத்தில் கடைசியாக நடிந்திருந்தார். அதில் அவரது கதாபாத்திரம் பெரிய அளவில் பேசப்பட்டது.

இந்த நிலையில் இவர் தற்போது அறிமுக இயக்குனர் ராகுல் அசோக் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடித்துள்ளார். இப்படத்திற்கு 'வெஞ்சென்ஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஏசி புரொடக்சன் தயாரிக்கும் இத்திரைப்படத்திற்கு அருண் ராஜ் இசையமைத்துள்ளார். இந்த நிலையில் தற்போது இப்படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி உள்ளது. இத்திரைப்படம் விரைவில் திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# அதனை தவிர்த்து மற்ற டி20 லீக் தொடர்களில் விளையாட எனக்கு விருப்பம் இல்லை டிராவிஸ் ஹெட்




ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் ஆன டிராவிஸ் ஹெட், ஐ.பி.எல். தொடரில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணியில் இடம்பெற்றுள்ளார். கடந்த வருடம் தொடக்க வீரராக களமிறங்கி அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் அவரை மெகா ஏலத்திற்கு முன் ரூ.14 கோடிக்கு ஐதராபாத் தக்க வைத்துள்ளது.

இந்நிலையில் தற்போது ஆஸ்திரேலிய அணிக்காக விளையாடி வரும் அவர் சர்வதேச போட்டிகளை தவிர்த்து ஐ.பி.எல். தொடரில் மட்டுமே தான் விளையாடுவேன் என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "நான் சர்வதேச போட்டிகளை தவிர்த்து ஐ.பி.எல். தொடரில் மட்டுமே விளையாடுவேன். ஏனெனில் ஆஸ்திரேலியா மற்றும் ஐ.பி.எல். தொடர்களில் நான் விளையாடும்போது தேவையான ஓய்வு கிடைக்கிறது. எனது குடும்பமும் எனக்கு முக்கியம் என்பதனால் தேவையான நேரத்தில் அவர்களுடன் இருக்க விரும்புகிறேன். அதனாலேயே நான் ஆஸ்திரேலியா அணிக்காகவும், ஐ.பி.எல். தொடரிலும் மட்டுமே விளையாடுவேன். அதனைதவிர்த்து மற்ற டி20 லீக் தொடர்களில் விளையாட எனக்கு விருப்பம் இல்லை" என்று கூறினார்.

# இங்கிலாந்துக்கு எதிரான 3வது டி20: தோல்விக்குப்பின் இந்திய அணியின் கேப்டன் கூறியது என்ன..?



இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் 2 போட்டிகளில் இந்திய வெற்றி பெற்று தொடரில் 20 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது.

இதில் டாஸ் வென்ற இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் பந்து வீச்சை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக்கு 171 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக பென் டக்கெட் 51 ரன்கள் அடித்தார். இந்திய தரப்பில் வருண் சக்ரவர்த்தி 4 ஓவர்களில் 24 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை அள்ளினார்.

பின்னர்172ரன்கள்இலக்கைநோக்கிஆடியஇந்தியஅணிசீரானஇடைவெளியில் விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. முன்னணி வீரர்களான சாம்சன் (3 ரன்கள்), சூர்யகுமார் யாதவ் (14 ரன்கள்), திலக் வர்மா (18 ரன்கள்) சொதப்பியது அணிக்கு பின்னடைவாக அமைந்தது.

20 ஓவர்கள் முழுமையாக விளையாடிய இந்திய அணி 9 விக்கெட்டுகளை இழந்து 145 ரன்கள் மட்டுமே அடித்தது. இதனால் இங்கிலாந்து 26 ரன்கள் வித்தியாசத்தில் நடப்பு தொடரில் முதல் வெற்றியை பெற்றது. இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஹர்திக் பாண்ட்யா 40 ரன்கள் அடித்தார். இங்கிலாந்து தரப்பில் ஜாமி ஓவர்டான் 3 விக்கெட்டும், ஜோப்ரா ஆர்ச்சர், பிரைடன் கார்ஸ் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். அந்த அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான அடில் ரஷீத் ஒரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தியிருந்தாலும் சிக்கன பந்துவீச்சை (4 ஓவரில் 15 ரன்கள்) வெளிப்படுத்தி இருந்தார்.

இந்நிலையில் இந்த போட்டியில் தாங்கள் அடைந்த தோல்வி குறித்து இந்திய அணியின் கேப்டன் சூர்யகுமார் யாதவ் பேசுகையில், "நாளின் பிற்பகுதியில் கொஞ்சம் பனி இருக்கும் என்று நினைத்தேன். ஹர்திக் மற்றும் அக்சர் பேட்டிங் செய்தபோது ஆட்டம் எங்கள் கைகளில் இருந்தது என்று நினைக்கிறேன். ஆனால் அதை மாற்றிய பெருமை அடில் ரஷீத்தை சாரும். அவர் மிகவும் சிறப்பாக பந்து வீசினார். அதனால்தான் அவர் உலகத்தரம் வாய்ந்த பந்துவீச்சாளராக இருக்கிறார். அவர் எங்களை 1, 2 ரன்கள் வீதம் எடுத்து ஸ்ட்ரைக்கை மாற்ற அனுமதிக்கவில்லை. அதனால்தான் எங்கள் அணியிலும் நிறைய ஸ்பின்னர்கள் இருந்தனர்.

டி20 போட்டிகளிலிருந்து நாங்கள் எப்போதும் ஏதாவது கற்றுக்கொள்கிறோம். பேட்டிங்கில் என்ன தவறு செய்தோம் என்பதை இந்த போட்டியிலிருந்து நாங்கள்பார்க்கவேண்டும்.தவறுகளிலிருந்துநாங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். ஷமி எதிர்காலத்தில் சிறப்பாக செயல்படுவார் என்று நான் நம்புகிறேன். அவர் (வருண் சக்ரவர்த்தி) பயிற்சிகளின்போது மிகவும் கடினமாக உழைத்து வருகிறார். அந்த கடின உழைப்பின் விளைவாக அவர் களத்தில் சிறந்த முடிவுகளைப் பெறுகிறார்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.